2018 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

26 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

7. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளை நவீனமயமாக்கும் முயற்சியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 94 இடங்களில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவையினை வழங்கும் பொருட்டு, மத்தியக் கூட்டுறவு வங்கியின் 14 புதிய கிளைகள் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்குகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலை சுருக்கி, வெண்ணெய்யை உருக்கி, மோரைப் பெருக்க வேண்டுமென்று பால் பொருட்களைப் பெறுவதில் உள்ள வழிமுறையைச் சொல்வார்கள். அதைப்போல, ஒவ்வொன்றுக்கும் ஒரு வழிமுறை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விஷன் 2023–ஐ அறிமுகப்படுத்துகிறபோது, கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்று ஓர் உயரிய கட்டளையை இட்டார்கள். முதலில் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணினார்கள். அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களின் அரசு, 2011 ஆம் ஆண்டு வரை 12 இலட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன்களாக இருந்த எங்கள் துறையின் கிடங்குகள் கொள்ளளவை கடந்த 7 ஆண்டுகளில், 23 இலட்சத்து 28 ஆயிரம் மெட்ரிக் டன்களாக உயர்த்திக் காட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற அருமைக்குரிய அண்ணன் அவர்கள், எங்கள் உணவுத் துறைக்கு பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை சிரித்த முகத்துடன் தந்தமைக்கு என் சார்பாகவும், உணவுத் துறையின் சார்பாகவும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அளந்து பார்த்து, அளவு பார்த்து, திட்டங்கள் தந்த தலைவர்கள் உண்டு. ஆனால், அம்மா அவர்களின் வழியில், மக்கள் அண்ணாந்து பார்த்து, அசந்து பார்த்து, அதிசயிக்கும் வகையில் திட்டங்கள் தந்த எங்கள் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குலம் காத்த, தாயின் நலம் காத்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கு அடிநாதத்திலிருந்து நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனது துறை சார்பாக மூன்று முத்தான அறிவிப்புகளைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது துறை சார்பாகவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

(அ) காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் மற்றும் பணி நீட்டிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.G.P. நியமனங்கள் குறித்து திரு. பிரகாஷ் சிங் வழக்கில் நேற்றுமுன்தினம், அதாவது, 3–7–2018 அன்று சில கண்டிப்பான உத்தரவுகளை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. குறிப்பாக,